உ

கணபதி துணை.

# புதுவை
# ஸ்ரீ மணக்குள விநாயகர்
# பஞ்சரத்தினம்.

சீர்காழித் தாலுக்கா செம்பைதானிருப்பு

ஸ்ரீ ஐ. சோமசுந்தர தேசிகரவர்கள்

செய்தது.

---

இஃது
சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை
உபாத்தியாயர்
ஸ்ரீமான் ந. கண்ணுசாமிப் பிள்ளையவர்களால்
பார்வையிடப்பட்டு

புதுவை உசிமேய ம. ள-ள-ஸ்ரீ
வீராசாமிப் பிள்ளையவர்களின் பௌத்திரரும்,
சண்முகம் பிள்ளை யவர்களின் புத்திரருமாகிய
இராஜ கணபதிப்பிள்ளை யவர்களால்
புதுவை – சைகோன் சின்னையா பிரஸ்ஸில்
பதிப்பிக்கப்பட்டது.

---

இரௌத்திரி ௵ இடப ௴

## சிறப்புப் பாயிரம்.

---

புதுவைக் கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதரும்
கலைமகள் பத்திராதிபரு மாகிய
ஸ்ரீமான் சி. பங்காருப் பத்தரவர்கள் கூறியது.

---

வெண்பா

சீர்மருவு செம்பை திகழ்சோம சுந்தரவேள்
கார்மருவு பஞ்சாத்தி னம்பகர்ந்தான் — நீர்மருவும்
வண்ணப் புதுவை மணக்குளவி நாயகற்கு
விண்ணமிழ்த மென்ன விழைந்து.

---



உ

கணபதி துணை.

புதுவை

## ஸ்ரீ மணக்குள விநாயகர்

# பஞ்சரத்தினம்.

## காப்பு.

நேரிசை வெண்பா.

சீராருஞ் செல்வச் செழும்புதுவை மாநகர்வாழ்
காராருந் துங்கக் கரிமுகங்கொள் — ஏரார்
மணக்குளவி நாயகனைம் மாமணிப்பா வோத
மணக்குமெனுள் ளத்தவன்றாள் வந்து.

ஞாமேவு சதகோடி சூரியர்கள் போலவே
சுடருமணி மகுட முடியுஞ்
சுவணகிம் புரிகொளொரு கொம்புமிரு சாணவுஞ்
சுமகசமு மூன்று மதமும்
பூமேவு நால்வாயு மைங்கரமு முன்கண்டெடன்
புந்திமகிழ் கூரும் வண்ணம்
பொருவரிய மூடிகமே னூர்தியூர்ந் தருளொடும்
போந்துநற் காட்சி தருவாய்
தேமேவு கற்பகா டவிநிழ லமர்ந்திடுஞ்
செல்வரும் புல்கு பத்தித்
திறத்தரு நிதந்தொறுஞ் சிந்தனை பலிக்கத்
திரண்டடைந் தேத்த லொழியா
மாமேவு புதுவைவள ராலய மமர்ந்தருள்
வழங்கிரா ளுந்து லங்கும்
மணக்குளவி நாயக ரெனக்கிளர்நல் லபிதான
மருவுகண நாத முதலே. (1)

திங்களணி யெங்கடவு டன்கைதிக ழுங்கனிமுன்
சென்றுவல மேற்றதெய்வத்
திருவருளி னுருவமே செகம்வணங் கும்ப்ரணவ
செல்வமே செல்வ நல்குந்
துங்கமூ லாதார பூதமே நாதமே
துட்டகூ ரட்ட வேடோ
டுன்னவொரு மடமயிலை யடைவித்த சோதியே
தொல்லைவல் வினைத புப்பாய்
தங்கமலி குன்றனைய மாடநெடு வீதிக
டதும்பபல பொருளெ லாமுந்
தலந்தொறுங் கொண்டுகொண் டியார்க்குமகிழ்
தந்துதந் திலகு துங்க [மல்கநனி
வங்கமலி புதுவைவள ராலய மமர்ந்தருள்
வழங்கிநா ளுந்து லங்கும்
மணக்குளவி நாயக னெனக்கிளர்நல் லபிதான
மருவுகண நாத முதலே. (2)

பணங்கொண்ட வல்குனல் லார்மோக மென்னும்வெ
பாழ்ங்குழியி னுக்குள் வீழ்ந்தே  ம்
பழிநல்கு நோயரவு கவ்வவே துன்பெனப்
பட்டதேள் கொட்ட நொந்து
கணங்கொண்ட வானந்த முத்தியங் கரையென்று
காண்பதென் றேங்கி யுன்றன்
கழல்கருதி நிற்பேற்கு னருண்மருந் தீந்தன்பென்
கைகொடுத் தேற்றி யாள்வாய்
குணங்கொண்ட மாலயற் கரியபா னுலகுயக்
கூறியபொ துச்சி றப்பென்
கோடிலொரு நான்குமெழு நான்குமா வான்றோர்
குலவுவே தாக மத்தின்  [கள்
மணங்கொண்ட புதுவைவள ராலய மமர்ந்தருள்
வழங்கிநா ளுந்து லங்கும்
மணக்குளவி நாயக ரெனக்கிளர்நல் லபிதான
மருவுகண நாத முதலே.  (3)

எண்ணரிய பிறவியா தினுமரிய மானுட
மெனும்.பிறவி பெற்று மேது
மீகையென் புருகன்பு தவமாதி யின்றியுழ
விழினானிவ னெனவென் னையே
பண்ணலே தள்ளிவிடி னார்துணையெ னக்கெனையு
னடிமலர்க் கடிய னாக்கி
யரியபரி பூரணா னந்தமெனும் வாழ்வுதந்
தயர்வற விருக்க வைப்பாய்
நண்ணினர்க டங்களுக் கனமாடை யீந்துடல்கொ
ணலியும்வெம் பிணிக ளோட்டி
கல்லாதா யினுமன்பு கொண்டுப கரித்திடும்
நாடறச் சாலை பல்ல
மண்ணிலகு புதுவைவள ராலய மமர்ந்தருள்
வழங்கிநா ளுந்து லங்கும்
மணக்குளவி நாயக ரெனக்கிளர்நல் லபிதான
மருவுகண நாத முதலே. (4)

சொன்னயம் பொருணயந் துறுமமூ துணர்வோர்
சொற்றுதிகள் கேட்ட வுன்றன் [டீன்
சுரோத்திர மதற்கிதென் னேயென விருப்பினுஞ்
சூழடியர் கூடும் வகைசொல்
லன்னவை தனக்குமகி ழருளாள ஞனதா
லடிமைநவி றுதியு மேற்றே [டடிபாவி
யருள்வையென் றேதுதுதி கொண்டிதுகொண்
யடைவோர்க்கு மருள் புரிகுவாய்
கன்னலடு சாலையி லெழும்புகையு மியாகமெழு
காமர்நன் புகையு மடவார்
கருங்குழற் கிடுபுகையு மொன்றிவா னந்தனிற்
கருமுகி லடர்ந்த தென்ன
மன்னியெழு புதுவைவள ராலய மமர்ந்தருள்
வழங்கிநர ஞந்து லங்கும்
மணக்குளவி நாயக னெனக்கிளர்நல் லபிதான
மருவு கணநாத முதலே. (5)

முற்றிற்று.